செ.வெ.எண்.31 நாள்:09.09.2020

# நீலகிரி மாவட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,(ST) உப்பட்டி. ஆகஸ்ட் - 2020 ஆம் ஆண்டிற்கான சேர்க்கைக்கு மாவட்ட அளவிலான கலந்தாய்விற்கு இணையதளம் மூலம் 15.09.2020 வரை விண்ணப்பிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு

---

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,(ST) உப்பட்டியில் ஆகஸ்ட்- 2020-க்கான மாவட்ட அளவிலான கலந்தாய்வின் மூலமாக சேர்க்கை நடைபெற உள்ளதால் கீழ்க்கண்ட விவரப்படி தொழிற் பிரிவுகளுக்கு தகுதியுள்ள மாணவ/மாணவிகள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். விண்ணப்பங்கள் **www.skilltraining.tn.gov.in** என்ற இணைய தள மூலம் 15.09.2020 வரை விண்ணப்பிக்கலாம். அலுவலக வேலை நாட்களில் நேரில் அணுகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இணைய தளத்தில் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள்: 15.09.2020 மாலை 5.45. மணி

## சேர்க்கை முற்றிலும் இலவசம்

| வ. எண் | தொழிற்பிரிவு / குறியீட்டு எண் | பயிற்சிக்காலம் | தகுதி |
|---|---|---|---|
| 1 | பொருத்துநர் | 2 ஆண்டுகள் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | கம்மியர்(மோட்டார் வண்டி) | 2 ஆண்டுகள் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3 | கம்பியாள் | 2 ஆண்டுகள் | 8ம் வகுப்பு தேர்ச்சி |
| 4 | குழாய் பொருத்துநர் | 1 ஆண்டு | 8ம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | பற்றவைப்பவர் | 1 ஆண்டு | 8 ம் வகுப்பு தேர்ச்சி |

---

<u>இணைய தளத்தில் விண்ணப்பிக்க தேவையான விவரங்கள்:</u>

- கம்பியாள், குழாய் பொருத்துநர், பற்றவைப்பவர், ஆகிய தொழிற் பிரிவுகளுக்கு பள்ளியில் முறையாக பயின்று பள்ளியின் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றமைக்கான மதிப்பெண் சான்றிதழ் மற்றும் இதர பிரிவுகளுக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சிக்கான மதிப்பெண் சான்றிதழ், பள்ளி மாற்றுச் சான்றிதழ், சாதி சான்றிதழ்,ஆதார் எண்,முன்னுரிமைச் சான்றிதழ்கள்
- மதிப்பெண் அடிப்படையிலும் அரசு விதிகளின்படி மாவட்ட கலந்தாய்வின் மூலம் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.
- பயிற்சிக்கட்டணம் முற்றிலும் இலவசம்.
- வயது வரம்பு அனைவருக்கும் 14 முதல் 40 வரை. (மகளிருக்கு வயது வரம்பு இல்லை.
- அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் ரூ.500/- மாதந்தோறும் ( வருகை நாட்களுக்கு ஏற்ப) உதவித் தொகை வழங்கப்படும்.
- கட்டணமில்லா பேருந்து பயண வசதி/ விலையில்லா மிதிவண்டி/ மடிக்கணிணி / பாடப்புத்தகம் மற்றும் வரைபட கருவிகள் / சீருடை / காலணி ஆகிய சலுகைகளை அரசு வழங்குகிறது.
- நவீன தொழில் வளர்ச்சியை அறிந்து கொல்லும் பொருட்டு **(Inplant Training)** மற்றும் வளாக நேர்காணல் **(Campus Interview)** மூலம் வேலை வாய்ப்பு போன்ற வசதிகள் இத்தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- மேலும் உணவுடன் கூடிய மாணவர் தங்கும் விடுதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி உள்ளது.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்படவேண்டிய கடைசி தேதி 15.09.2020
- பயிற்சியின் முடிவில் தேசிய தொழிற் சான்றிதழ் **(NTC)** வழங்கப்படும்.

பிரபல முன்னனி தொழிற் நிறுவனங்களின் மூலமாக வளாக நேர்க்காணல் நடத்தப்பட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு: குன்னூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வரை 04262-296149, **9499055709** என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.